**புதுச்சேரி அரசு**
**வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை**
**கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை)அலுவலகம்**
**தாவரவியல் பூங்கா, புதுச்சேரி.**

**எண்.12/கூவேஇ(தோ.)/வே.அ(தே.தோ.இ)/2021-22** **தேதி: 03.02.2022**

## செய்திக் குறிப்பு

புதுச்சேரி அரசு வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை, கூடுதல் வேளாண் இயக்குனர் (தோட்டக்கலை) அலுவலகம் மூலம் 2021-22 வருடத்திற்கான **தைப்பட்டத்தில்** பயிரிடப்பட்ட பழவகை மரங்கள், வாழை, பூக்கள், மரவள்ளி, நெகிழி மூடாக்கு மற்றும் காய்கறிகளுக்கான **"சாகுபடிக்கான மானியம்"** பெறுவதற்கான விண்ணப்பங்கள் தோட்டக்கலை விவசாயிகளிடமிருந்து வரவேற்கப்படுகிறது.

இந்த விண்ணப்பங்களை விவசாயிகள் தங்கள் பகுதிக்குட்பட்ட உழவர் உதவியகத்தில் வரும் **04.02.2022** முதல் பெற்றுக்கொள்ளலாம். மேலும், விண்ணப்பங்களை வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை இணையதள வாயிலாகவும் **(https://agri.py.gov.in)** பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். முழுமையாக பூர்த்தி செய்த விண்ணப்பங்களை தங்கள் பகுதிக்குட்பட்ட உழவர் உதவியகத்தில் வரும் **16.03.2022** தேதிக்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(சி. சிவராமன்)
**கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை)**